## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை - வடமத்திய மாகாணம் - அநுராதபுரம்

இந்த அதிகார சபையில் வெற்றிடமாக நிலவும் பொறியியலாளர் (பொறிமுறை) பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கு உங்களது விண்ணப்பங்களை 2026-09-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### பொறியியலாளர் (பொறிமுறை)

**தரம் மற்றும் சம்பள அளவு** - 02ஆம் தரம்

96,650-10×2, 480-15×3, 450-173, 200 (MM 1-3-2025)

**வயதெல்லை** - ஆட்சேர்க்கப்படும் நாளில் 45 வயதிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில், அரச அரச நிறுவனங்களில் (கூட்டுத்தாபனம், நியதிகள் சபை) சேவையில் இருப்பவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**01. வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் i அல்லது ii அல்லது iii)**

i. பொறிமுறை பொறியியல் பாடத் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பொறிமுறை பொறியியல் விடயத்துறையில் இயந்திராதிகள் மற்றும் வாகனப் பராமரிப்பு தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

ii. இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பொறிமுறை பொறியியல் விடயத் துறைக்கு இயைபான இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பொறிமுறை பொறியியல் விடயத்துறையில் இயந்திராதிகள் மற்றும் வாகனப் பராமரிப்பு தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

iii. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறிமுறை பொறியியல் விடயத்துறைக்கு இயைபாக தேசிய தொழிற்றிறனில் (ஏஞு) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனமொன்றில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**02. உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் i அல்லது ii)**

i. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. ''கனிஷ்ட முகாமைத்துவ'' சேவை தொகுதியில் 1ஆம் தரத்திற்கு இயைபான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனைய நிபந்தனைகள்**

- ❖ விண்ணப்பதாரர் விண்ணப்பம் கோரப்படும் இறுதி நாளில் இயைபுடைய தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- ❖ அரச சேவை, அரை அரச நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனம் / கூட்டுத்தாபனம் / சபை தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரங்களை உள்ளடக்கி விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்ப வேண்டும் என்பதுடன் தாம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இருவரின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- ❖ அதிகார சபையின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஒப்பந்தக் காலத்தை நீடிக்கலாம் அல்லது நீடிக்காமல் விடலாம்.
- ❖ ஆட்சேர்க்கப்படும் பதவியின் எண்ணிக்கை 01
- ❖ இந்த ஒப்பந்தப் பதவிக்கு மாதாந்தம் ரூபா 102,896.00 (85,896.00+17,800.00) கொடுப்பனவு உட்பட அதிகார சபையினால் செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவும் வழங்கப்படும்.
- ❖ விண்ணப்பதாரருக்கு விசேடமான தகைமை அல்லது/ மற்றும் அனுபவம் இருந்தால் அவற்றை கவனத்திற் கொண்டு உயர் தரத்தில் அல்லது ஏதாவது தரத்தின் சம்பள அளவில் பொருத்தமான சம்பள அளவில் அமர்த்தப்படுவார்.
- ❖ நிரந்தர வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கும்போது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சேவை தொடர்பான வினைத்திறன் கவனத்திற் கொள்ளப்படும்.
- ❖ தெளிவற்ற முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**முகவரி:**
**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**எச்.பீ. சேமசிங்க மாவத்தை,**
**அநுராதபுரம்,**
**வடமத்திய மாகாணம்.**